**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திரு.R.சரவண பாபு, பி.ஏ,.எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**
**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 ஆம் நாள் திங்கள்கிழமை**
**IA.No: 01/2025**
**in**
**H.M.O.P.no: 122/2016**

1. மதுவந்தி
2. மைனர் ஐஸ்வின் ... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

/எதிராக/

ரங்கசாமி ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனு 31.07.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.கோகிலவாணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.தீபக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 ன் கீழ் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய வாழ்க்கை பொருளுதவி நிலுவை தொகையான ரூ.52,000/-ஐ செலுத்த கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் ஏற்கனவே வாழ்க்கை பொருளுதவி கேட்டு இடைமனு எண்.16/2018 ல் மனுதாரருக்கும், அவருடைய மைனர் மகன் ஐஸ்வின்

என்பவருக்கும் மனு தாக்கல் செய்திருந்ததில் இந்நீதிமன்றம் இருவருக்கும் தலா ரூ.2000/-ம் வீதம் மொத்தம் ரூ.4000/-ம் செலுத்த உத்திரவிட்டிருந்ததது என்றும், மேற்படி உத்தரவினை எதிர்மனுதாரர் செயல்படுத்தாததால் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுவினை தள்ளுபடி செய்ததது என்றும், அதனை எதிர்த்து மேல்முறையீட்டு மனு எண்.3/2023 ஐ தாக்கல் செய்ததில் மனுதாரர்களுக்கு ரூ.2,20,000/-ம் செலுத்தி மீண்டும் கோப்பிற்கு எடுத்ததில் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் 31.12.2023 முதல் 31.01.2025 வரை 13 மாதங்களுக்கு ரூ.52,000/-ம் செலுத்த வேண்டும் எனவும், எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வருகிறார் என்றும், மனுதாரரையும் அவருடைய குழந்தையும் கவனிக்க தவறிவிட்டார் என்றும், மேலும் மனுதாரருக்கு செலுத்த வேண்டிய ஜீவனாம்ச தொகையான ரூ.52,000/-ஐ உடனே செலுத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார்.

## 3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

எதிர்மனுதாரர் எதிருரையில் மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கல்ல என்றும், மனுதாரர் சொல்வது போல் அசல் மனுவை கோப்பிற்கு எடுப்பதற்காக மாண்புமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் CMA.NO.3/2023 தாக்கல் செய்து மேற்படி நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் மனுதாரர்களுக்கு ஜீவனாம்சமாக செலுத்த வேண்டிய ரூ.4000/-ஐ கடந்த 15.03.2018 முதல் 31.12.2023 வரையான 56 மாதங்களுக்கு ரூ.2,24,000/-மும் கடந்த 25.09.2023 ம் தேதியில் ரூ.1,50,000/-மும், அதனை பின்னிட்டு 31.01.2024 ம் தேதியில் ரூ.70,000/-மும் மொத்தமாக ரூ.2,20,000/-ம் செலுத்திவிட்டதாகவும், குறிப்பிட்டுள்ளார். மேலும், கடந்த 31.12.2023 முதல் 31.01.2025 வரை ரூ.52,000/-ம் செலுத்த வேண்டும் என கூறியிருப்பது உண்மையில்லை என்றும், கடந்த 19.07.2019 ம் தேதியில் ரூ.8000/-ம்

30.07.2019 ம் தேதியில் ரூ.8000/—மும், 05.08.2019 ம் தேதியில் ரூ.4000/—மும், 03.10.2019 ம் தேதியில் ரூ.4000/—மும், 04.02.2022 ம் தேதியில் ரூ.8000/—மும் ஆக மொத்தம் ரூ.32,000/—ம் செலுத்தி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் ஏற்கனவே செலுத்திய ரூ.32,000/—ம் தொகையை கழித்துவிட்டு மீதி தொகையான ரூ.20,000/—ஐ மட்டும் செலுத்தினால் போதும் என எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதே ஆகும்.

5. இருததரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

<u>6. தீர்வு:</u>

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனக்காகவும், தனது மைனர் மகனுக்காகவும், இடைக்கால ஜீவனாசமாக தொகை கேட்டு மனு தாக்கல் செய்ததில் மனுதாரர்களுக்கு தலா ரூ.2000/—ம் வீதம் மொத்தம் ரூ.4000/—ம் செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும், மாண்புமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றம், மேட்டுர் அவர்களின் உத்தரவின் பேரில் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் கடந்த 25.09.2023 ம் தேதியில் ரூ.1,50,000/—மும், அதன் பிறகு 31.01.2024 ம் தேதியில் மொத்தம் ரூ.2,20,000/—ம் செலுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. அதனை பின்னிட்டு எதிர்மனுதாரர் கடந்த 19.07.2019 ம் தேதியில் ரூ.8000/—ம் 30.07.2019 ம் தேதியில் ரூ.8000/—மும், 05.08.2019 ம் தேதியில் ரூ.4000/—மும், 03.10.2019 ம் தேதியில் ரூ.4000/—மும், 04.02.2022 ம் தேதியில்

ரூ.8000/−மும் ஆக மொத்தம் ரூ.32,000/−ம் செலுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி எதிர்மனுதாரர் செலுத்திய ரூ.32,000/−ஐ வரவு வைக்காமல் விடப்பட்டுள்ளது என்பதையும், அதனை மனுதாரர் தனது மனுவில் குறிப்பிடவில்லை என்பதையும் அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டிய 31.12.2023 முதல் 31.01.2025 வரை மொத்தம் 13 மாதங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.52,000/−யும் எதிர்மனுதாரர் ரூ.32,000/−ம் செலுத்தியுள்ளார் என்பதையும், அது போக மனுதாரர் ரூ.20,000/−ம் மட்டும் செலுத்தினால் போதும் என்பதையும் அறிய முடிகிறது. எனவே, எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டிய ஜீவனாம்ச தொகையான ரூ.20,000/−ஐ இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது. எதிர்மனுதாரர் ஒரு மாத காலத்திற்குள் ரூ.20,000/−ஐ செலுத்த தவறும் பட்சத்தில் மனுதாரர்கள் எதிர்மனுதாரர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தப்படுகிறது.

இறுதியாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை கருதி செலவுத் தொகை இல்லை என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08ம் நாள் திங்கள்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**Sd/−சரவண பாபு**
**சார்புநீதிபதி,**
**மேட்டூர்**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணம்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்:** இல்லை

**Sd/–சரவண பாபு**
**சார்புநீதிபதி,**
**மேட்டூர்**